


உலகமெங்கும் திருப்புகழ் பரவச்செய்த **குருஜி ஏ.எஸ்.ராகவன்**
(1928 – 2013)

தட்டழி யாது திருப்புகழ் கற்கவு மோதவு முத்தமிழ்
தத்துவ ஞான மெனக்கருள் புரிவாயே

உ

ஓம் முருகா

# திருப்புகழ்
# இசை வழிபாடு

## (அபிராமி அந்தாதி, பதிகம் உடன்)

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய

திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, திருஎழுகூற்றிருக்கை, வேல், மயில், சேவல், விருத்தங்கள், முறையோடு வழிபடத் தொகுக்கப்பட்ட இசைநூல்.

**திருப்புகழ் அன்பர்கள்** (பதிவானது)

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | *1993 – 4000* பிரதிகள் |
| இரண்டாம் பதிப்பு | : | *1995 – 3000* பிரதிகள் |
| மூன்றாம் பதிப்பு | : | *1998 – 4000* பிரதிகள் |
| நான்காம் பதிப்பு | : | *2000 – 2000* பிரதிகள் |
| ஐந்தாம் பதிப்பு | : | *2002 – 3000* பிரதிகள் |
| ஆறாம் பதிப்பு | : | *2004 – 3000* பிரதிகள் |
| ஏழாம் பதிப்பு | : | *2005 – 3000* பிரதிகள் |
| எட்டாம் பதிப்பு | : | *2008 – 4000* பிரதிகள் |
| ஒன்பதாம் பதிப்பு | : | *2011 – 4000* பிரதிகள் |
| பத்தாம் பதிப்பு | : | *2013 – 4000* பிரதிகள் |
| பதினொன்றாம் பதிப்பு | : | *2015 – 3000* பிரதிகள் |
| பன்னிரண்டாம் பதிப்பு | : | *2018 – 2000* பிரதிகள் |
| பதின்மூன்றாம் பதிப்பு | : | *2020 – 2000* பிரதிகள் |

**THIRUPPUGAZH ANBARGAL (Regd.)**

**REGISTERED OFFICE :** N - 110, Pratap Building
Connaught Circus
New Delhi - 110 001

**REGIONAL OFFICES :**

**CHENNAI** : S2, "Madhurams Apartments
19/21, Balakrishna Road,
Mylapore, Chennai - 600 004
Phone: 044-24982891/9444140101

**MUMBAI** : No.5, "Bhairavi"
Uttam Co-op. Housing Society
St. Antony Church Road, Chembur,
Mumbai - 400 071
Phone: 022-25213430

**KARNATAKA** : 402, III Main Road,
R.T. Nagar, II Block,
Bangalore - 560 032
Phone: 080 - 23335799

Printed at :
**Sri Maruthy Laser Printers**
173, Peters Road, Indira Garden, Royapettah, Chennai-600 014
Phone : 2852 0403 / 2852 4256 / 2852 2656



குஞ்சர மாமுக விக்கிநப்ரபு, அங்குச பாச கரப்ரசித்தன் ஓர்
கொம்பன், மகோதரன் முக்கண் விக்ரம கணராஜன், கும்பிடுவார்
வினை பற்றறுப்பவன், எங்கள் விநாயகன், நக்கர் பெற்றருள்
குன்றைய ரூபக கற்பகப்பிள்ளை.



श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम, दक्षिणाम्नाय, श्री शारदापीठम, शृङ्गेरी
**Sri Sri Jagadguru Shankaracharya Mahasamstanam**
Dakshinamnaya, Sri Sharada Peetam, Sringeri.

V.R. GOWRI SHANKAR, BE, DIISc, MIMA,
CEO & Administrator
Sri Sringeri Math and its Properties, Sringeri - 577 139
(Karnataka - India)

**Sri K.N. Krishnamoorthy,**
Chairman
Thiruppugazh Anbargal (Regd)
Golden Jubilee Celebrations Committee
402, III Main, II Block, R.T. Nagar,
Bangalore - 560 032.

தாங்கள் அனுப்பிய லெட்டர் பெற்றுக் கொள்ளப்பட்டு ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய மஹாஸ்வாமிகளின் பாத கமலங்களில் தங்கள் நமஸ்காரத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ ஆச்சாரிய ஸ்வாமிகள் திருப்புகழ் அன்பர்கள் குழுவினர் ஜூலை 18, 19 தேதிகளில் பெங்களூரில் ஐம்பது ஆண்டுகள் நிறைவு விழா கொண்டாடுவதை பற்றி மிகவும் ஸந்தோஷமடைந்தார். மேற்படி திருப்புகழ் விழா நன்றாக நடைபெற்று இதில் பங்குகொள்ளும் திருப்புகழ் அன்பர்கள் எல்லோரும் தீர்க்காயுஸ், ஆரோக்கியம், சௌபாக்யங்களுடன் க்ஷேமமாக வாழ்ந்து வரவும், மேலும் திருப்புகழ் இசை வழிபாடு - 8ம் பதிப்பு சிறப்பாக வெளியிடவும் ஸ்ரீ ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் ஆசீர்வதித்து அருளிய மந்த்ராக்ஷதையும் ஸ்ரீ சாரதா சந்த்ர மௌளீஸ்வரர் ப்ராஸாதமும் இத்துடன் அனுப்பி இருக்கிறோம்.

இப்படிக்கு

**(V.R. GOWRISHANKAR)**

Ph : 044-27222115
Fax : 044-27224305, 37290060 Email : skmkanci@md3.vsnl.net.in

॥ Sri Chandramouleeswaraya Namaha : ॥

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta :
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**

Srimatam Samsthanam
No. 1, Salai Street, Kanchipuram - 631 502.

*13-5-2008*

திருப்புகழ் அன்பர்கள் இயக்கத்தின் 50 ஆண்டுகள் நிறைவு விழாவை 2008 ஜூலை மாதம் 18-19 தேதிகளில் பங்களூரில் கொண்டாட பொன்விழா குழுவினர் ஏற்பாடுகள் செய்து அவ்வமயம் திருப்புகழ் இசை வழிபாடு 8ம் பதிப்பை வெளியிட இருப்பது கேட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் சந்தோஷித்தார்கள்.

மக்கள் பெரும்பாலோர் உலக போகங்களில் மூழ்கி வாழ்க்கை நடத்தும் போக்கை நினைத்து அருணகிரிநாதர் மக்கள் நற்கதியடைய வழிகாட்ட வேண்டி முருகனை வேண்டும் நெஞ்சை நெகிழச் செய்யும் பாடல்கள்தான் திருப்புகழ். திருப்புகழ் வாழ்க்கையை இன்பமயமாக்குகிறது. பதற்றம் பதபதைப்பு இல்லாமல் பக்தியுடன் இருக்க உதவுகிறது.

திருப்புகழ் அன்பர்கள் இயக்கம் வெளியிடும் 501 திருப்புகழ் பாடல்கள், ராகங்கள், தாளங்கள் சந்தங்கள் அமைப்புகளுடன் வெளிவரும் புத்தகத்தை எல்லோரும் வாங்கிப் படித்து பக்தியுடன் பரம க்ஷேமமாக இருக்க செந்தில் ஆண்டவனை ப்ரார்த்தித்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆசீர்வதிக்கிறார்கள்.

# செந்தில் துறவி

4, கிழக்கு ரத வீதி, திருச்செந்தூர்.
37, போயஸ் சாலை,
சென்னை-600 018.


---

'திருப்புகழ் அன்பர்கள்' சென்னையிலிருந்து எனது ஆசியுரை வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இதை எழுதுகிறேன்.

முருகனின் புகழ் என்றால், மணத்திற்கு மணமாக, மனத்திற்கு இதமாக, வரும் அமிர்தமல்லவா! முகுந்தன், ருத்ரன், கமலன் இவர்கள் மூவரையும் தன்னிடத்தே கொண்டவன் என்று மு,ரு,க என்ற நாமம் அமையப் பெற்றவனின் புகழ் வெள்ளப்பெருக்கினிலே ஆழ்ந்து, தோய்ந்து, குடைந்து, விளையாடி அன்பின் மிகுதியினால் இராப்பகல் முழுவதும் கண்பனித் தாரை காட்டி, முருக, சடாக்ஷர, குமர, குருபர, சண்முக என அவனது நாமத்திலும், புவனியெல்லாம் புகழ் பரப்பும் நோக்கிலே அமைந்தது போன்று எங்கும் தன் மணம் பரப்பி சுகமணம் கூட்டும் பரிமள சுகந்த வீத மயமென புகழ்ந்து பாடும் தொண்டர் குழாம் அமையப் பெற்றதொரு நல்லாரிணக்கமே ''திருப்புகழ் அன்பர்கள்'' என்றதொரு அமைப்பு.

இவர்களது நோக்கம் திருப்புகழ் பரப்புவதா? எனில் ஆம்! என்று அடித்துச் சொல்லலாம். திருப்புகழ் இயக்கம் இது. தாம் கற்று, பிறருக்கும் கற்றுக் கொடுத்து (பணம் காசு ஏதும் இன்றி) பஜனைகள் நடத்தி திருப்புகழிலே தம்மைக் கரைத்துக் கொண்ட அன்பர்கள் திருக்கூட்டம் இது.

அரசாங்கம் எவ்வாறு டில்லி (Central) தலைநகரிலிருந்து இயக்கப்பட்டால் மற்ற இடங்களில் (States) இயங்குவது போல், இத்திருப்புகழ் அன்பர்கள் டெல்லியிலிருந்து உந்திவிடப் பட்டு, பம்பாய், சென்னை, பெங்களூர் என்று இந்தியாவில் அறுகுபோல் வேரோடி ஆல்போல் தழைத்து, வெளிநாட்டு அன்பர்களும் ஆங்காங்கு இவ்வியக்கத்தை தன்னிறைவுடன் ஆன்மலாபம், மனநிறைவு, கருதி இயக்கி வருகிறார்கள் என்பது சிறப்பிற்குரியது.

இவ்வியக்கத்தின் சீரிய ஒழுங்கும், கட்டுப்பாடும், குருபக்தியும் என்னை வியப்பிலாழ்த்தியது. 20ம் நூற்றாண்டில் பம்பாய் போன்ற பெரும்நகரில் கட்டுப்பட்டிபோல்

பஜனையும், பாடலும், வள்ளி கல்யாணமுமா? அதிசயம்! என்று மலைத்தேன்! சில ஆண்டுகளுக்கு முன், இவ்வியக்கம், அதனுடைய கதி, வருபவர்களை தன்மயமாக்குதல் கண்டு திணறினேன். அக்னி என்ற பெயருடைய சிவனின் புதல்வன் புகழ்பாடும் இயக்கம் அவ்வக்னிபோலவே எல்லோரையும் தன்வசத்தே ஆக்கி மனோலயம் தானே தந்து அறுமுகவா! சொல்லொணாது இந்த ஆனந்தமே என வியந்து பாராட்ட வைக்கிறது.

நிலையில்லா பொய்யான இவ்வுடம்பு 'மெய்' எனப் பெயர் சூட்டிக்கொண்டு துருத்திபோல் 'புஸ் புஸ்' என்று காற்று அடிக்கும்போதே தூற்றவேண்டிய அனாவசியமான உலகாயத, எதுக்கும் உதவாத பதரான வாழ்க்கையை தூற்றி, பக்தி, ஞானம், வைராக்கியம் போன்ற நற்பண்புகளை, கொள்வாயாக என்று கூறுவது போல் ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' என்று ஆன்றோர் கூறிய மூதுரை இதையே குறிக்கிறது. 'திருப்புகழ் அன்பர்கள்' சங்கம் இந்த கைங்கர்யத்தை செவ்வனே செய்து வருகிறது. நாளும் பொழுதும் தழைத்து வளர்ந்து வருகிறது. தேய்வும், தொய்வும், இங்கு இல்லை. அதற்கு பதில் ஆய்வும், திருப்புகழ் மேய்வும் நிறைய உள்ளது.

இவர்கள் பணியில் தாம் கற்ற இசையுடன் கூடிய திருப்புகழை தனியொரு தொகுப்பாகக் கட்டி அப்புகழ் ஆரத்தை அலைவாய் அமர்ந்த குமரன், அறுமுகனின் தோள்களிலே சூட்டும் பெருமையும் கொள்கின்றனர்.

இதற்கெல்லாம் காரண கர்த்தாவை நான் இங்கு புகழத்தான் வேண்டியுள்ளது. அப்பெருமானை உவந்து

''எந்தை வருக, ரகுநாயக வருக
மைந்த வருக, மகனே யினி வருக,
என் கண் வருக எனதாருயிர் வருக'
என்று பரிவினொடு கோசலை புகல
வருமாயன் சிந்தை மகிழும் மருகா...
திங்கள் அரவு நதிசூடிய பரமர் தந்த குமர
அலையேகரைபொருத
செந்தினகரிலினிதே மருவி வளரும் பெருமாளே''
என வாழ்த்தி நிற்கிறேன்.

❖ ❖ ❖

ஓம் முருகா

# பதிப்புரை

உலக சமுதாயம் ஒன்றுபட்டு, ஒருமைப்பாடுடனும் அமைதியுடனும் வாழ வழிவகுத்துக் கொடுக்க ஞானிகள் ஆங்காங்கே தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கண்டறிந்த தத்துவங்களையெல்லாம் உலகத்தோர் அறிந்து உய்யும் பொருட்டு பல இலக்கியங்களை உருவாக்கித் தந்துள்ளனர். வேதங்களும் உபநிடதங்களும் உணர்த்தும் பரம்பொருளின் தத்துவங்களையெல்லாம் அந்த ஞானிகளின் பன்மொழி இலக்கியங்களிலே காணலாம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்தியாவிலே தோன்றிய அநுபூதி பெற்ற மகான்களின் தொகை எண்ணிலடங்கா. இமயம் முதல் குமரி வரை பாரத நாடு முழுவதும் மக்கள் பண்புடன் வாழ, தாங்கள் வணங்கும் வழிபடு தெய்வத்தினிடம் உலகத்து உயிர்கள் அனைத்தும் ஒன்றியிருக்கும் பரம்பொருளின் தன்மையை உணர்ந்து, அன்பு வழியை இசை வடிவமாக உணர்த்தியுள்ளனர். இந்த அன்பு நெறியைத் தெள்ளென விளக்கி, மனத்திலே இறையருள் கொண்டு, அமைதியுடன் வாழ வழிவகுத்துக் கொடுத்த மகான்களின் இலக்கியங்கள் அளவற்ற செல்வங்களாக தமிழகத்திலே உள்ளன. ஞானிகளின் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இந்த அன்பு நெறியின் அடிப்படையில்தான் பல காப்பியங்கள் உருவாகியுள்ளன.

தன்னைப் பூரணமாக ஆண்டவனிடத்தில் அர்ப்பணித்து, தெய்வீக நெறியில் நின்று, அன்பிலே விளைந்து அவர்கள் அநுபவித்த ஆனந்தத்தேனை இசை வடிவமாகவே ஆக்கித் தந்திருக்கிறார்கள். அந்த எண்ணற்ற மகான்களில் ஒருவராக 600 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலே தோன்றியவர் அருணகிரிநாத ஸ்வாமிகள். ஆறுமுகப் பெருமானை குறிக்கோள் தெய்வமாகக் கொண்டு, அன்பையும், அவிரோதத்தையும் உயிர்நாடியாகக் கொண்டு, மக்கள் பண்புடன் வாழ, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்புகள்,

திருஎழுகூற்றிருக்கை, வேல் மயில் சேவல் விருத்தங்கள் முதலாகிய நூல்களை அறுமுகப் பெருமானின் அநுபூதி பெற்று வகுத்துத் தந்தவர் அருணகிரிநாதர். அன்றாட வாழ்க்கையில் அல்லலுற்றுத் தவிக்கும் உள்ளத்தின் கலக்கங்களையும், அவற்றிலுள்ள காம, க்ரோத, லோப, மோக மத, மாத்சர்யாதி அழுக்குகளையெல்லாம் அகற்றித் தூய்மையாக்கி, அமைதியுடன் துக்க-சுக பேதமின்றி வாழ வழிவகுத்துக் கொடுக்கின்றன அவரது நூல்கள்.

திருப்புகழ் பாக்களின் சந்தச் சிறப்பும், தாளங்களும் பொருள் நயமும், பாடுபவர்கள், கேட்பவர்கள் உள்ளங்களை பக்திக் கடலில் ஆழ்த்தி அந்தமில்லாப் பேரின்பத்தை அளிக்க வல்லது. திருப்புகழ் பாடி இறை அநுபவம் பெற்ற பெரியோர்கள் பலர். படித்தாலும் படித்துக் கேட்டாலும், பாடினாலும் பாடிக் கேட்டாலும், செவிக்கும் சிந்தைக்கும் நல்விருந்தாக அமைந்து அமைதியைக் கொடுக்கவல்லது, அருணகிரிநாதரின் படைப்புகள்.

திருப்புகழ் பாக்களை மக்களிடையே பரவும்படிச் செய்த மகான்களின் முன்னணியில் நிற்கும் தவத்திரு வள்ளிமலை சச்சிதானந்த ஸ்வாமிகள் திருப்புகழ் பாக்களை மானஸிக பூஜையாக, முதலில் ஸங்கல்பம், தீபம், குருஸ்துதி, அடியார் துதி, விநாயகர் துதி இவற்றுடன் தொடங்கி முருகனை அழைத்தல், தரிசனம், அபிஷேகம், அர்ச்சனை, தூபம், தீபம், நைவேத்தியம், தீபாராதனை, நமஸ்காரம், அறியாமை கூறி அருள்வேண்டல், மந்திரஜபம், தெய்வயானை, வள்ளிதுதிகள் பின்னர் ஜயமங்களம் வாழ்த்து, போற்றி என அமைத்து நித்ய பாராயணத்திற்காக ''திருப்புகழ் பாராயணத் தவநெறித் திருமுறை'' என்ற திரட்டை வெளியிட்டிருந்தனர். சுவாமிகளுக்குத் தொண்டு செய்து, அவரிடம் திருப்புகழ் பயின்ற அவருடைய சீடர்கள் இத்திருமுறையை துணையாகக் கொண்டு திருப்புகழ் பாராயணம் செய்து வருகிறார்கள்.

செந்திலாண்டவனின் தனிப்பெருங்கருணையினாலேயே திருப்புகழ் பாக்களின் சந்தங்களுக்கு ஏற்ப அமையப்பெற்ற ராகங்களில், சந்தம் பிறழாது பாடி வருகின்றனர் ''திருப்புகழ் அன்பர்கள்'' என்னும் அமைப்பிலே பாடிவரும் அன்பர்கள். அவர்கள் பாடிவரும் ராகங்களெல்லாம் ஆண்டவனால் உணர்த்தப் பட்டவையே அல்லாது தனிப்பட்ட ஒருவரால் அமைக்கப்

பட்டவையல்ல. அன்பர்கள் இதுவரை ஆண்டவனையே குருவாகக் கொண்டு பாடிவரும் 501 பாடல்களை முறையாகத் தொகுத்து, அவர்கள் பாடிவரும் வழிபாட்டு முறை, ''ஓம்'' என்று ஆரம்பித்து, மனத்தை நாதத்தில் நிலைப்படுத்தி, அதைத் தொடர்ந்து விநாயகர் துதி, குருவணக்கம் முதலியவற்றை முன்னதாகக் கொண்ட திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருப்பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், ஏனைய ஸ்தலங்கள், பொதுப்பாடல்கள், பஞ்சபூத ஸ்தலங்கள், சோலை மலை என்று வரிசைப்படுத்தி கிடைக்கும் நேரத்திற்குத் தகுந்தவாறு அலங்காரம், அந்தாதி முதலியவற்றுடன் திருப்புகழ் பாடுதல். பின்னர் அநுபூதி வேல், மயில், சேவல் விருத்தங்கள் திருவகுப்புகள் பாடி, ஆண்டவனுக்கு திருப்புகழ் பாக்கள் மூலமாகவே மாத்ருகா புஷ்பமாலை அணிவித்து, அர்ச்சனை தூபம், தீபம், நைவேத்யம் என்று வரிசையாக நிகழ்த்தி, ஆண்டவனுக்கு மகா தீபாராதனையை அடுத்து மந்திரபுஷ்பம், நான்கு வேதங்கள் ஆகம சூத்ரங்கள் சமர்ப்பணம் செய்து, ''ஏறு மயிலேறி விளையாடு முகமொன்றே'' என்ற திருப்புகழ் பாடி பெண்கள் ஆரத்தி எடுத்தபின் உலக அமைதிக்காக திருப்புகழ் பாக்களிலுள்ள, பிரார்த்தனைகளையெல்லாம் நேரத்திற்கு ஏற்ப பாடி வழிபட்டு, முடிவில் ப்ருகதாரண்யக உபநிஷத்தில் உள்ள சாந்தி மந்த்ரமான ''அஸதோ மா ஸத்கமய'' என்ற சாந்தி ஸ்லோகம் சொல்லி, ஓம் என்ற பிரணவத்துடன் நிறைவு பெறும்.

திருப்புகழ் அன்பர்கள் ஒவ்வொரு வழிபாட்டிற்கும், கற்கும் வகுப்பிற்கு எடுத்துச் செல்லவும் வசதியாக இருக்கும் பொருட்டு இந்த ''திருப்புகழ் இசை வழிபாடு'' என்ற புத்தகம் உருவாகியுள்ளது. செந்திலாண்டவன் அளித்த பணியை சிரமேற்கொண்டு அவனருளாலே செயல்பட்டு இதுவரை இந்நூல் ஏழு பதிப்புகள் (22,000 பிரதிகள்) வெளியிடப்பட்டு விட்டன.

திருப்புகழில் ஆர்வங்கொண்டு கற்றுக்கொள்[illegible]ர் அன்பர்களின் எண்ணிக்கை இந்த 22,000 பிரதிகளையும் கடந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பெருவாரியான புதிய அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த எட்டாம் பதிப்பு (4,000 பிரதிகள்) உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் ஏழாம் பதிப்பைவிட 24 பாடல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே எட்டாம் பதிப்பில் அடங்கும் திருப்புகழ் 501 ஆக இருக்கும். மற்றும் இதில் இதுவரை ஆண்டவன் அன்பர்களுக்கு கற்பித்த அநுபூதி, அலங்காரம், அந்தாதி, திருவகுப்புகள் எல்லாம் இடம் பெற்றுள்ளன. இவை தவிர, விநாயகர் துதி, விநாயகர் நாமாவளிகள், குருவணக்கம், மந்த்ர புஷ்பம், வேதங்கள், சூத்ரம் முதலியனவும் இடம் பெற்றுள்ளன. ஆண்டவன் அமைத்துத் தந்த ராகங்களும் அவை அமைந்த சந்தங்களின் தாள அமைப்புகளும் பாடல்களின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன. பாட்டு மற்றும் ராக முதற்குறிப்பு தொகுப்பு, அகர வரிசையில், பாடல் எண்களுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. தாளங்களின் அங்கங்களை யெல்லாம் விளக்கத் தனியாக ஒரு அநுபந்தமும் இணைக்கப் பட்டுள்ளது. தற்காலத்தில் நிலவிவரும் 175 தாளங்களோடு ஒன்றி அமைந்துள்ள அங்கதாளங்களை யெல்லாம் அவற்றோடு ஒப்பிட்டு, அவற்றின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. அந்தந்த சந்தங்களுக்கு ஏற்பட்ட அங்கதாளங்களோடு பாடினால்தான், சொற்கள் சிதைவுறாமல், அவற்றின் பொருள்களை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. பாட்டின் முடிவிற்குப் பின்பு, பிரார்த்தனையாக இருக்கும் அடிகளை மீண்டும் பாடி முடிக்கும் வகையில், அவைகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. வேல், மயில், சேவல் விருத்தங்களைத் தொடர்ந்து பாடும் வகையில், அவைகள் அடுத்தடுத்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

திருப்புகழ் பாக்களை ராகத்துடனும், தாளத்துடனும் பாடிவிடலாம். ஆனால், அவைகளின் பொருளை உணர்ந்து பாடுவதற்கு நம்மை தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். ''தகைமை பெற்று உனது பொற்சரணம் எப்பொழுதும் நட்பொடு நினைத்திட அருள்வாயே'' என்பது அருணகிரிநாதரின் பிரார்த்தனை. அந்த தகைமையை எப்படி நாம் அடைய வேண்டும் என்பதை பல திருப்புகழ் பாடல்களில் தெள்ளென விளக்கியுள்ளார் அருணகிரிநாதர்.

திருப்புகழ் பாக்களை இசையுடன் வழிபட, ஆண்டவன் முன்னிலையிலிருக்கும் ஒவ்வொரு அன்பரும் அருணகிரிநாதர் வகுத்த வழியைக் கடைப்பிடிக்க சில நியதிகளை மேற்கொள்ளுதல் அவசியம்.

1. பயம் கலந்த பக்தி.

2. உலகாயத விஷயங்களிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கும் மனத்தை ஒருநிலைப்படுத்தி ஆண்டவன் புகழ்பாட ஆர்வம் கொள்ளல்.

3. உள்ளத்தில் சுயநலமற்ற அன்பை நிறைத்து, கோபதாபங்களையெல்லாம் அறவே அகற்றி, ''குறியைக் குறியாது குறித்து அறியும் நெறி''யிலே புகழ் பாடுதல்.

4. வழிபாட்டில் ஈடுபடும் ஒவ்வொரு அன்பரின் உயிரும் உடலும், உணர்வும், உரையும், ஆண்டவனின் திருவடித் தாமரையில் ஒன்றும் படியான வகையிலே பாடுதல்.

5. வழிபாட்டின் ஆரம்ப முதல் முடிவுவரை, மனத்தை அலையவிடாமல், இருந்தபடியே இருந்து, பாடும் பாட்டுக்களிலே மனம் ஒன்றுதல்.

இந்த விதமான தகுதியை தமக்கு அருளுமாறு அருணகிரிநாதர் பல திருப்புகழ் பாக்களிலே பிரார்த்தனையாக கேட்பது திருப்புகழ் பாடும் அன்பர்கள் அனைவருக்கும் தெரிந்ததே. அன்பர்கள் வழிபாட்டிலே ஒரே உணர்ச்சியோடு ஒன்றுபட்ட மனத்துடன், ஒரே குரலில் பாவத்துடனும் ராக தாள லயத்துடனும் பாடும் திருப்புகழ் பாக்கள் எல்லாம் ஒருநாளும் வீண்போகாது. அவைகள் உறுதியாக ''நினைத்ததும் அளிக்கும், மனத்தையும் உருக்கும்''. அதுமட்டுமல்லாமல், அப்படிப்பாடும் அன்பர்களின் ''வினைப்பகையறுத்து, நினைப்பவை முடித்து, மனத்துயர் கெடுத்து'' ஆண்டவன் அருள்புரிவார் என்பது அருணகிரி நாதர் நமக்குச் சொல்லும் உபதேசம்.

''திருப்புகழ் இசை வழிபாட்டிலே'' அன்பர்கள் கூட்டு வழிபாடாக பாடும் திருப்புகழ் பாக்களின் திறமையை 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணாசல ரெட்டியார் தமது காவடிச்சிந்திலே அழகாக வர்ணிக்கிறார்.

''அருணகிரி நாவிற் பழக்கம் - தரு
சந்தத் திருப்புகழ் முழக்கம் - பல
அடியார் கணமொழியோதினில் அமராபதி இமையோர்செவி
அடைக்கும் அண்டம் உடைக்கும்''.

''மனது துயரற, வினைகள் சிதறிட, பிணிகள் சிதறிட மனது பதமுற'' ஆண்டவன் திருப்புகழ் பாடும் அன்பர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில், உருவாகியுள்ள இந்த நூலைச் செந்திலாண்டவனின் திருப்பாதங்களில் மட்டுமில்லாமல், திருப்புகழ் மக்களிடையே பரவ தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த மகான்களின் பாத கமலங்களிலும் சமர்ப்பிக்கிறோம்.

அருணகிரிநாதரின் பிரார்த்தனையின்படி ''இசைக்கும் செந்தமிழ் கொண்டு இரக்கும் புன் தொழிலில் புகாமல்'' திருப்புகழ் பாக்களின் பெருமையை உணர்ந்து, அவைகளை முறையாகப் பாடி, அருணகிரிநாதர் போதிக்கும் அன்பு நெறியையும் அவிரோதத்தையும் வாழ்க்கையில் கொண்டு, சுயநலமற்ற பெரியதொரு அன்புக்கூட்டம் உலகில் உருவாக, செந்திலாண்டவன் அருளை விழைகிறோம். திருப்புகழ் உலகெலாம் பரவ வேண்டும். வாழ்க்கையில் அமைதி தந்து, இவ்வாழ்வை நல்வாழ்வாக்கி அநுபூதி நிலையை அடைவிக்கும் திருப்புகழ்ப் பாக்களை ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்ற திருவள்ளுவர் வாக்கின்படி பழுதறக் கற்றுப் பாடுவதோடு நின்றுவிடாமல், அதன்படி வாழ்ந்து, பிறருக்கும் சந்தம் பிறழாமல் கற்றுக் கொடுத்து திருப்புகழ் நெறியிலே நமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, நல்வாழ்வு அமைய ''முருகா உன் தண்டையணி பாதம் எங்கள் தலைமிசை அணிந்து, அழுது அழுது உனது அருள் விரும்பி, உனது இனிய திருப்புகழ் விளம்ப அருள் தாராய்'' என்று செந்திலாண்டவனை வேண்டிக் கொள்வோமாக.

ஒரு ஆன்மீகத் தொண்டினை மேற்கொண்டால் ஒரு பெரிய அன்பும் அவிரோதமும் கொண்ட அன்பர்கள் கூட்டத்தை உருவாக்க முடியும். முருகன் அத்தொண்டு எல்லோருக்கும் பயனுள்ளதாக அமைய துணையாக நின்று வழிகாட்டி அருள்வான்.

இந்நூலை வெளியிட துணைநின்று உதவிசெய்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். அவர்கள் அனைவருக்கும் இறைவன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

எவ்வளவோ நுண்மையாகச் செயல்பட்டாலும் அன்பர்களின் கண்களுக்கும், சிந்தைக்கும் தப்பியோடிய பிழைகள் இந்நூலில் இருந்தால், அவைகளை மன்னித்தருளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திருப்புகழ் அன்பர்கள் என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் குறிக்கோளாக மக்களிடையே தெய்வ நம்பிக்கையும், அன்பும், அவிரோதமும், தர்மமும் செழிக்கச் செய்யத் தான் அருணகிரிநாதர் மூலமாக உலகுக்குத் தந்த திருப்புகழ் முதலாய நவமணிகளை முறையாகக் கற்பித்து, பிறருக்கும் கற்றுக் கொடுக்க அருள் செய்து அப்பணி வெற்றிகரமாகவும் பயனுள்ளதாகவும் அமைய அருள்பாலித்த **செந்திலாண்டவன் திருப்பாதங்களில் இந்நூலை சமர்ப்பணம்** செய்கிறோம்.

*டில்லி*

*6-6-2008* **திருப்புகழ் அன்பர்கள்**

## பதிப்புரை

### ஒன்பதாம் பதிப்பு

மகா புனிதம் தங்கும் செந்திலில் வாழ் கந்தப் பெருமானின் கருணையினால், திருப்புகழ் அன்பர்கள், தம் பொன் விழா மேடையில், திருப்புகழ் இசை வழிபாடு புத்தகத்தின் எட்டாம் பதிப்பை வெளியிட்டனர். தற்போது வெளிவரும் ஒன்பதாம் பதிப்பில் கூடுதலாக ஒரு பாடல் அனுபந்தமாக சேர்க்கப் பட்டுள்ளது. தவிரவும் இறைவனருளால், அன்பர்கள் பல்லாண்டுகளாகப் பாடிவரும் அபிராமி அந்தாதி, அபிராமியம்மை பதிகம் ஆகிய நூல்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புதிய பதிப்பை இறைவன் திருப்பாதங்களில் சமர்ப்பிப்பதை பெரும் பேறாகக் கருதுகிறோம்.

*2.4.2011* **திருப்புகழ் அன்பர்கள்**

## பதிப்புரை

## பதின்மூன்றாம் பதிப்பு

உலகெங்கும் விரிந்து வரும் திருப்புகழ் அன்பர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய 2013ம் ஆண்டு வெளியிட்ட 10ம் பதிப்பு, 2015ம் ஆண்டு வெளியிட்ட 11ம் பதிப்பு, 2018ம் ஆண்டு வெளியிட்ட 12ம் பதிப்பைத் தொடர்ந்து, தற்போது 13ம் பதிப்பு வெளியிடப்படுகிறது.

**திருப்புகழ் அன்பர்கள்**

*20.11.2020*

உ

முருகா

# ஆரமுதமான அறுபத்திரண்டு....

"பரம மாயையின் நேர்மையை, யாவரும் அறியொணாததை, நீ குருவாய் இது பகருமாறு செய்தாய், முதல் நாளுறு பயனோ தான்" எனும் திருப்புகழ்ப் பாடல் வரிகளைப் பொருளுணர்ந்து பாடும் எவருமே, அருணகிரிநாதரை எண்ணி வணங்காமலிருக்க மாட்டார்கள். சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் அவதரித்த இம்மகான், தம்முடைய, திருப்புகழ், கந்தர் அநுபூதி - அலங்காரம் - அந்தாதி, வேல் - மயில் - சேவல் விருத்தங்கள், திருஎழுகூற்றிருக்கை, திருவகுப்புகள் ஆகிய நவமணி நூல்கள் மூலம் மக்களின் மனமாசுகளை அகற்றி, தூய்மையாக்கி, மெய்ஞ்ஞான இன்பத்தைக் கொடுக்கும் ஞானத்தமிழ் விளக்கேற்றியவர். அருணகிரியார் அவ்வாறு அளித்துவிட்டுச் சென்ற ஆனந்தத் தேனை செந்திலாண்டவன் அருளால் நம்மிடையே இசை மலராக மலரச் செய்தவர், பெருமதிப்பிற்குரிய, அமரர், குருஜி, திரு.ஏ.எஸ்.ராகவன் அவர்கள் என்றால் அது மறுக்க முடியாத உண்மை.

முருகப் பெருமான் தமக்கு உணர்த்திக் கொடுத்த திருப்புகழ் முதலான பாக்களை அனைவருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற குருஜி அவர்களின் அவா, திரு. ஆர்.நாராயணன், திரு.எம்.மகாலிங்கம், திரு. நாராயணசாமி ஆகிய பக்தர்கள் மூலம் நிறைவேறியது. 1958ஆம் ஆண்டில், மூன்று மாணவர்களைக் கொண்டு துவக்கப்பட்ட இம்முதல் வகுப்பே, பின்னால் பரந்து வளர்ந்து நிழல் பரப்பப் போகும் "திருப்புகழ் அன்பர்கள்" என்ற ஆலமரத்திற்கான வித்தாக அமைந்தது எனலாம்.

அன்பர் ஜி.சுந்தரம் அவர்களின் பேராதரவினால், புதுதில்லி கனாட் சர்க்கஸில் உள்ள அவரது இல்லத்தில் வாரம் இருமுறை திருப்புகழ் வகுப்புகள் நடத்தப் பெற்றன. திருப்புகழ்ப் பாக்கள், அவற்றிற்கே உரித்தான சந்தங்களுடனும், தாளக் கட்டுடனும், கர்நாடக இசைக்கே உரிய அழகிய ராகங்களில் தொடுக்கப்பட்டு பாமாலையாக முருகனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட போது பல்வேறு

துறைகளைச் சேர்ந்த தமிழர்கள் இதன்பால் ஈர்க்கப்பட்டனர். இந்திய அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளிலிருந்த எண்ணற்ற தமிழ் இளைஞர்களும் அவர்கள் குடும்பப் பெண்களும் திருப்புகழ் இசையின் இனிமையால் கவரப்பட்டு, தேனைச் சுற்றிய வண்டுகள் போல் குருஜி அவர்களின் வகுப்புகளுக்குச் சென்று முறையாகக் கற்றுக் கொள்ளத் துவங்கினர்.

அகில இந்திய வானொலியைச் சேர்ந்த தேவக்கோட்டை திரு.சுந்தரராஜ ஐயங்கார் அவர்களும், நட்டுவனார் சிக்கில் திரு. ராமசாமிப் பிள்ளை அவர்களும், குருஜி அவர்களுடன் இணைந்து திருப்புகழ்ச் சந்தங்களை ஆய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். மிருதங்க வித்வான் ராமநாதபுரம் திரு.ஈஸ்வர ஐயர் அவர்களும், ஹார்மோனிய நிபுணர் திரு.கே.பிঃ நாராயணன் அவர்களும், தம் இறுதிக்காலம் வரை, குருஜி அவர்களின் திருப்புகழ்த் தொண்டிற்குப் பக்கபலமாக இருந்தனர். ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகையில் சுப்புடு அவர்கள் பின்வருமாறு எழுதியிருந்தார். "இந்தத் தலைமுறையில் திருப்புகழ்ப் பாக்களை இணைந்திசைக்க ராகவன், ஈஸ்வர ஐயர், நாராயணன் ஆகிய மூவரின் கூட்டணிக்கு ஒப்பாக யாருமே இருக்க முடியாது."

முதல் முழு நீள திருப்புகழ் இசைவழிபாடு 1962 ஆம் ஆண்டு புதுதில்லி இர்வின் சாலையிலுள்ள விநாயகர் கோயிலில் நடைபெற்றது. குருஜி அவர்களால் உருவாக்கப்பட்ட ஒப்பற்ற வழிபாட்டு முறையைப் பின்பற்றி, தீயணைப்புத் துறை அதிகாரி திரு.சிங்கார சுந்தரம் அவர்கள் வீட்டில் கிருத்திகை நாட்களிலும் திரு.ஈஸ்வர ஐயர் வீட்டில் சஷ்டி தினங்களிலும் திருப்புகழ் இசைவழிபாடு நிகழ்ச்சிகள் தொடர்ந்து பல ஆண்டுகள் நடைபெற்றன. தில்லியில் உள்ள பல குடியிருப்புகளுக்கும் குருஜி அவர்களே நேரில் சென்று வகுப்புகள் நடத்தத் துவங்கிய போது, நகரெங்கும் வாழ்ந்த தமிழர்களை வகுப்பு பேதமின்றி ஒன்றாகக் கூட்டி வைத்தது திருப்புகழ் எனும் அன்புத்தளை.

தலைநகர் தில்லியில் துவங்கி, ஆழமாக வேரூன்றிய திருப்புகழ் வழிபாட்டிற்கு, மிகுந்த ஊக்கமளித்தவர் நம் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வெங்கட்ராமன் அவர்கள். திருமுருக கிருபானந்த வாரியார், வாகீச கலாநிதி

திரு. கி.வா.ஜகன்னாதன், புலவர் கீரன், சாது பார்த்தசாரதி, பித்துக்குளி முருகதாஸ், ரிஷிகேஷைச் சேர்ந்த ஸ்வாமி சிதானந்த மகராஜ், சாதுராம் ஸ்வாமிகள் போன்ற பல பெரியோர்களும் குருஜிக்குப் பேரதரவு அளித்தனர்.

மேலும் அன்பர்கள் திருவாளர்கள் கே.சரவணை, ஏ.ஜி. கிருஷ்ணன், வி.ராமசாமி ஐயர், எஸ்.வி.எஸ்.ரத்னம், சி.என்.ஆதிசேஷன், பி.சுப்பிரமணியன், சி.வி.எஸ்.மணி, பி.ராமசாமி ஐயர், டி. கிருஷ்ணையர், கே.வெங்கடேசன், ஆர்.வி.சுப்பிரமணியன், டி.சந்தானம், டி.எம்.சுப்பிரமணியன், எஸ்.கே.ராமநாதன், கே.லக்ஷ்மி நாராயணன், என்.சுப்பிரமணியன், என்.ராமமூர்த்தி ஆகியோரின் பங்களிப்பு பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம்.

"அற்புதத் திருப்புகழைத் தேனூற ஓதி, எத்திசைப் புறத்தினும் ஏடேவு ராஜதத்தினைப் பணித்ததும்" முருகனே என்றபடி, குருஜி அவர்கள், சென்னை, மும்பை, பெங்களூரு போன்ற நகரங்களுக்குச் சென்று அங்கு வசிக்கும் அன்பர்களை ஒன்று சேர்த்து, அவர்களுக்குத் திருப்புகழ் கற்றுக் கொடுத்தார். குருஜி அவர்களிடம் நேரிடையாகத் திருப்புகழ் கற்றுக் கொள்ளும் பேறு பெற்ற பல மூத்த அன்பர்களும், அவர்கள் செல்லும் ஊர்களில் எல்லாம், வகுப்புகள் நடத்தத் துவங்கிய போது திருப்புகழ் இயக்கமானது வலுப்பெறத் துவங்கியது. ஒரு சில பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிடுகிறோம். திருவாளர்கள் ஜி.கிருஷ்ணன், என்.எஸ்.மணி, ஆர். வெங்கட்ராமன், ஜி.பாலசுப்பிரமணியன் மற்றும் திருமதிகள் வசந்தா கிருஷ்ணமூர்த்தி, தாரா கிருஷ்ணன், குமாரி லட்சுமி நாராயணன், கல்யாணி ராமசாமி, அலமேலு சந்தானம், ருக்மணி சுப்ரமணியன், ஸரஸ்வதி சுப்ரமணியன், ஸரஸ்வதி துரைசாமி, ராஜலட்சுமி பாலசுப்ரமணியன், ஜெயலட்சுமி ராமச்சந்திரன், மங்களம் மணி ஆகியோரது பணி மகத்தானது.

1988ஆம் ஆண்டு "திருப்புகழ் அன்பர்கள்" அமைப்பு தில்லியில் பதிவு செய்யப்பட்டது என்பது, பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய செய்தி. அருணகிரியார் வகுத்துக் கொடுத்திருக்கும் அன்பு - அவிரோதம்

எனும் இரு உயர் நெறிகளை அவர்தம் நூல்கள் வாயிலாகப் பயின்று, வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றும் நோக்கமுடைய அன்பர்களை ஒன்று சேர்ப்பதையே குறிக்கோளாக கொண்டு குருஜி அவர்களின் தலைமையில் தோற்றுவிக்கப்பட்டது. "திருப்புகழ் அன்பர்கள்" இயக்கம், அமைப்பு பதிவு செய்யப்பட்டதும், மாநில அளவில், சென்னையில் திரு.வி.ராமசாமி, பெங்களூருவில் திரு.ஆர்.வெங்கட்ராமன், மும்பையில் திரு.ஏ.எஸ்.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டு, பல மாநிலங்களைச் சேர்ந்த திருப்புகழ் அன்பர்கள் ஒன்று சேர்ந்தனர். இவ்வன்பர்கள், இன்றளவும் குருஜி வகுத்துக் கொடுத்த வழியில் திருப்புகழ் முதலான நூல்களை சத்தத்துடனும், இசையுடனும், பக்தியுடனும் பாடிப் பயன்பெற்று வருகின்றனர்.

"உரைபெற வகுத்தருணை நகரின் ஒரு பத்தனிடும் ஒளிவளர் திருப்புகழ் மதாணி க்ருபாகரன்" அல்லவா நம் முருகன்! திருப்புகழில் ஆர்வமுள்ள அன்பர்கள் அனைவருக்குமே பயன் அளிக்கும் வகையில், 1991ஆம் ஆண்டு "திருப்புகழ் மதாணி" என்ற அழகிய பெயர் சூட்டப்பட்ட புத்தகம், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால், சென்னையில் வெளியிடப்பட்டது. இந்நூல் முருகனுக்கு அணிவிக்கப்பட்ட பாமாலையின் வைரப் பதக்கமாகவே விளங்கியது.

செந்திலாண்டவன் தமக்கு உணர்த்திக் கொடுத்தபடி, திருப்புகழ் அன்பர்களுக்கென ஒப்பற்ற ஒரு இசை வழிபாட்டு முறையைக் குருஜி அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இம்முறையை உலகெங்குமுள்ள அன்பர்கள் வேறுபாடின்றிப் பின்பற்ற உதவும் வகையில், பாக்களுடன் அவற்றின் சந்தம், தாளம், ராகம் போன்ற முக்கிய குறிப்புகளடங்கிய ஒரு தனிப்புத்தகம் வெளியிட முடிவு செய்யப்பட்டது. பல அன்பர்களின் கடின உழைப்பின் பலனாக குருஜி அவர்கள் அதுவரை கற்றுக் கொடுத்திருந்த 425 திருப்புகழ்ப் பாடல்கள் மற்றும் பன்னிரண்டு திருவகுப்புகளுடன் அருணகிரியாரின் மற்ற நூல்களும் அடங்கிய "திருப்புகழ் இசை வழிபாடு" என்ற அருமையான புத்தகம் உருவாகியது. வகுப்புகளுக்கும், இசைவழிபாட்டிற்கும் எடுத்துச் செல்லும்படியான அளவில்

அமைக்கப் பட்டிருந்த இப்புத்தகத்தின் முதல் பதிப்பு, 1993ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஒன்பதாவது பதிப்பில் குருஜி அவர்கள் தன் வாழ்நாளில் கற்றுக் கொடுத்த 505 பாடல்களும் இடம் பெற்றதோடு, அவர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அன்பர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்த அபிராமி அந்தாதி, பதிகம் ஆகிய நூல்களும் பதிப்பிக்கப் பெற்றன. 39500 பிரதிகள் அடங்கிய பன்னிரண்டு பதிப்புகளையும் கடந்து நூலின் தேவை மேன்மேலும் அதிகரித்து வருகிறது. இப்பொழுது வெளிவரும் பதின்மூன்றாவது பதிப்பின் முதல் பிரதி, செந்திலாண்டவனின் திருப்பாதங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

புத்தகங்கள், கருத்தரங்குகள், விழா சிறப்பு மலர்கள் மற்றும் கூட்டு இசைவழிபாடு மூலம் திருப்புகழ் அன்பர்கள் இயக்கமானது காட்டாற்று வெள்ளம் போல் பரவத் துவங்கியது. ஒரு கால கட்டத்தில், குருஜி அவர்களுடைய தனித்துவமுடைய இசை வழிபாட்டு முறையை, இன்றைய மற்றும் வருங்கால சந்ததியினருக்குப் பாடல்களின் சந்தம், தாளம், ராகம், பாவம் இவை சற்றும் குன்றாமல் எடுத்துச் செல்ல வேண்டுமே என்ற நியாயமான கவலை ஏற்பட்டது. அப்போது தான் திருப்புகழ் இசையை முறையாக ஒலிநாடாக்களில் பதிவு செய்யும் எண்ணம் வெளியிடப்பட்டது. "நினைத்த காரியம் அநுக்கூலமே புரி" கந்தப் பெருமானின் கருணையினால், 1996ஆம் ஆண்டு அதுவரை கற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பாடல்களும், மாதிரிக்கான ஒரு இசை வழிபாட்டு நிகழ்ச்சியும் அடங்கிய முப்பத்தேழு ஒலிநாடாக்கள் வெளியிடப்பட்டன. இதே போன்று அபிராமி அந்தாதி - பதிகம் ஆகிய பாடல்களும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. இவையனைத்துமே குருஜி அவர்களின் தெய்வீகக் குரலில், கற்றுக் கொடுக்கும் பாணியிலேயே இருந்ததால், வகுப்புகள் நடைபெறாத இடங்களில் வசிக்கும் அன்பர்கள் உட்பட, அனைவருக்குமே வரப் பிரசாதமாக அமைந்தன. அன்பர்கள் அடைந்த ஆனந்தம் "தித்தித்து அறிந்த அன்றே, கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்து அறக் கைத்ததுவே" எனும் கந்தர் அலங்கார வரிகளை நினைவூட்டுவதாக இருந்தது.

அன்பர் ஏ.எஸ்.மணியம் அவர்கள் உழைப்பின் காரணமாக உலகெங்கும் வாழும் அன்பர்களின் உபயோகத்திற்கென www.kaumaram.com என்ற இணையதளத்தில், குருஜி அவர்கள் கற்றுக் கொடுக்கும் பாணியில் அமைந்த அனைத்துப் பாடல்களும் பதிவேற்றப்பட்டன. 1980 முதல் 1991 வரையிலான இடைப்பட்ட காலத்தில் குருஜி அவர்கள் லண்டன், அமெரிக்கா, கனடா ஆகிய வெளிநாடுகளுக்கும் திருப்புகழ் இசைப் பயணங்கள் மேற்கொண்டதால், உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறு பெருமாளின் அனுக்ரஹமும் நமக்குக் கிட்டியது. அங்கெல்லாமும் திருப்புகழ் வெகுவாகப் பரவியது. குருஜி அவர்களின் பெரு முயற்சியால் “வள்ளி கல்யாணம்” எனும் நூல் அருணகிரியாரின் பாக்களிலிருந்து தொகுக்கப்பட்ட பாடல் வரிகளால் மட்டுமே வடிவமைக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வெள்ளி, பொன், மணி விழாக்கள் கண்டுவிட்ட நம் மனத்தில் சில எண்ணங்கள் எழாமலில்லை. பல அன்பர்களும் துவக்கத்தில் திருப்புகழ் கற்றுக் கொண்டபோது, அதன் ஓசை நயத்தாலும், சொல் வளத்தாலும் மட்டுமே கவரப்பட்டு வந்தனர். ஆனால் அருணகிரிநாதரின் நூல்களுக்குள் ஆழமாகச் செல்லச் செல்ல, வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், காவியங்கள் போன்ற அனைத்தின் சாரத்தையுமே அவை தம்முள் அடக்கி வைத்திருந்தன என்பதைக் கண்டு கொண்டனர். குழந்தை ஒன்று அரிச்சுவடியில் ஆரம்பித்து, படிப்படியாக மேலேறி உலகம் போற்றும் விஞ்ஞானியாகப் பரிணமிப்பதைப் போன்று அன்பர்கள் அருணகிரியாரின் அரிய தத்துவங்களை ஜீவாதாரமாகக் கொண்டு, தம் வாழ்க்கையின் பல படிகளைக் கடந்து இன்று மிக உன்னத நிலையை எட்டியுள்ளனர் என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

மேற்கூறியவை தவிர அருணகிரியாரின் நூல்களுக்கென இருந்த ஒரு தனித்துவம் பற்றியும் இங்கு நாம் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு குழந்தை நோயுற்றபோது, தான் மருந்துண்டு பின் பால் நினைந்தூட்டும் பரிவுடைய தாய் போன்று அருணகிரியார், உலகிலுள்ள அனைத்துயிர்களின் துன்பங்களைத் தம்முடையனவாக ஏற்றுக் கொண்டு, அவற்றினின்றும் விடுபட்டு பேரின்ப முத்தியை அடைவதற்கான

மார்க்கத்தையும் கூட நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறார். ஈடிணையற்ற இப்பக்தி மார்க்கத்தில் அன்புடைமை, அவிரோதம், தன்னலமற்றுப் பிறர்க்கு ஈதல், அடியார் கூட்டத்தின் பெருமைகள், அத்வைத நெறி, அறன் வலியுறுத்தல், எனது யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும் இதய பாவனை, நிலையாமை போன்ற பல நெறிகளும் வெகுவாகப் புலப்படுகின்றன. தொண்டு செய்யும் அடியார் கூட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ள திருப்புகழ் அன்பர்கள், "உயர் கருணை புரியும் இன்பக்கடல் மூழ்கி உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே" என ஒருமித்த மனத்துடன் பாடி வருவதைக் காண்கிறோம். எனவேதானோ என்னவோ செந்திலாண்டவன் இவ்வமைப்பினருக்கு "திருப்புகழ் அன்பர்கள்" என்ற மிகப் பொருத்தமான பெயரையும் அமைத்துத் தந்திருக்கிறான்.

ஆறிரு விழியோன் அருளால் அறுபத்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்ட இம்மணியான தருணத்தில், தம் ஆரம்ப காலக் குறிக்கோளைச் சென்றடைவது திருப்புகழ் அன்பர்களுக்கு எவ்வாறு சாத்தியமாயிற்று என்பதை அறிய இதுகாறும் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகளின் அட்டவணையைப் பார்ப்போம்.

1. 1965 - முதல் அருணகிரிநாதர் நினைவு விழா, புதுதில்லி
2. 1975 - அருணகிரிநாதரின் ஆறாவது நூற்றாண்டு விழாவையொட்டி, அவர் சிறப்புத் திரு உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலை வெளியிடப்பட்டது.
3. 1980 - குருஜியின் லண்டன் திருப்புகழ்ப் பயணம் பி.பி.சி யின் தமிழோசையில் திருப்புகழ்
4. 1983 - தில்லி வெள்ளி விழா
5. 1988 - பெங்களூருவில் திருப்புகழ் வைபவம், குருஜி அவர்கள் அமெரிக்கா - கனடா நாடுகளில் திருப்புகழ்ப் பயணம்
6. 1989 - தில்லியில் அருணகிரி மகோத்ஸவம்
7. 1991 - சென்னையில் திருப்புகழ் மதாணி வெளியீடு

8. 1992 - திருப்புகழ் உத்ஸவம் - மும்பை
9. 1993 - வேல் மயில் விருத்தங்கள் - ஒலிநாடா வெளியீடு
10. 1993 - முதல் "திருப்புகழ் இசை வழிபாடு" புத்தகம், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களால் வெளியிடப்பட்டது
11. 1994 - கர்நாடகா வெள்ளி விழா
12. 1996 - திருப்புகழ்ப் பாக்கள் - ஒலிநாடா வெளியீடு
13. 1997 - மும்பை வெள்ளி விழா
14. 1998 - திருப்புகழ்த் திருப்பணி விழா - சென்னை

    சென்னை வெள்ளி விழா
15. 2001 - அருணகிரிநாதர் ஆன்மிகப் பெருவிழா
16. 2008 - 1958-2008 - திருப்புகழ் அன்பர்கள் பொன்விழா வைபவம் (பெங்களூருவில் நடைபெற்றது)
17. 2013 - திருப்புகழ் ஆன்மிகப் பெருவிழா - சென்னை.

    "திருப்புகழ் இசை வழிபாடு" புத்தகம் கன்னட மொழியில் வெளியிடப்பட்டது.
18. 2014 - படி விழா - அருணகிரிநாதர் விழாக்களின் பொன்விழா வைபவம், புதுதில்லி
19. 2015 - திருப்புகழ்ப் பெருவிழா, வள்ளி கல்யாணம் - பெங்களூரு
20. 2017 - குரு ஸமர்ப்பண திருப்புகழ் இசை வழிபாடு விழா, சென்னை (505 திருப்புகழ்ப் பாக்களின் ஸமர்ப்பணம்)
21. 2018 - 1958-2018 திருப்புகழ் அன்பர்கள் மணி விழா வைபவம், புதுதில்லி. "திருப்புகழ் இசை வழிபாடு" புத்தகம், தெலுங்கு மொழியில் வெளியிடப்பட்டது.
22. 2019 - வெள்ளி விழா - ஹைதராபாத். திருப்புகழ் அன்பர்கள் இயக்கத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் - www.thiruppugazhanbargal.org தொடங்கப்பட்டது.

திருப்புகழ் அன்பர்கள் - முகநூல் பக்கம் (Facebook page - Thiruppugazh Anbargal), வலையொளி அலைவரிசை You Tube channel - Thiruppugazh Anbargal) தொடங்கப்பட்டன.

23. 2019 அருணகிரிநாதர் விழா - பொன் விழா வைபவம், பெங்களூரு


திருப்புகழ் அன்பர்கள் என்ற அமைப்பை நிறுவி, அன்பால் நம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி வந்த குருஜி அவர்கள் 2013ஆம் ஆண்டு முருகனடி சேர்ந்த போது கலங்காத நெஞ்சமே இல்லை எனலாம். ஆனால் அவரது அருள் ஒளி இன்றளவும் திருப்புகழ் அன்பர்களை விட்டு நீங்கவே இல்லை எனும் அளவுக்கு தொடர்ந்து இயங்கலை வகுப்புகள் (Online classes) நடைபெற்று வருகின்றன. உலகின் பல்வேறு திக்குகளிலும் உள்ள திருப்புகழ் அன்பர்கள், எங்கு ஒன்று சேர்ந்தாலும், ஒரே குரலாக இணைந்து பாடும் பொழுது, அங்கு குருஜி அவர்களின் ஸாந்நித்யத்தை எவரும் உணர்வார்கள்.

கோவிட் தொற்று ஏற்பட்டு எந்த விழாவும் நடத்த முடியாத நிலையிலும், முன்பு பல்வேறு இடங்களில் குருஜி அவர்கள் நிகழ்த்திய இசை வழிபாட்டு நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டு அந்தந்த நாட்களில் இணையதளத்தில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. உலகெங்குமுள்ள அன்பர்கள் இதனால் பேரானந்தம் அடைந்து வருகின்றனர்.

குரு அருளாலும் முருகன் திருவருளாலும் சுவையில் அமுதமாகவும், பயனில் மருந்தாகவும் விளங்கும் அருணகிரிநாதரின் நூல்களைக் கற்றுப் பயனடைவோமாக. இறைவன் அளித்த சிறு மதலையாக நம்மிடையே வந்த திருப்புகழ் அன்பர்கள் இயக்கமானது அறுத்திரண்டு வயது பூர்த்தியாகி, மணிவிழாவையும் கடந்து சென்று கொண்டிருக்கும் இத்தருணத்தில், கடல் உலகினில் வரும் உயிர்படும் அவதிகள் கழியவும் கலகமினையதுள் கழியவும் நமைப் பணி விதிக்கும் ஸ்வாமியாம் செந்திலாண்டவனை வேண்டி நிற்போமாக.

திருப்புகழ் அன்பர்கள்

20.11.2020



## ஸ்ரீ அருணகிரிநாதர்

அந்தாதி யில்லா இறைவனுக்கு அந்தாதி யன்றுரைத்தும்
நந்தா வகுப்பு அலங்காரம் அவர்க்கே நனிபுனைந்தும்
முந்தாதரவில் அவன்புகழ் பூதிமுற்றும் சொன்ன
எந்தாய் அருணகிரிநாதா எம்மை நீஏன்று அருளே

## திருப்புகழ் இசை வழிபாடு

# தாள விளக்கங்கள்

அருணகிரிநாத ஸ்வாமிகளின் காலத்தில் நடைமுறையில் உள்ள தாளங்கள் அவரது பூத வேதாள வகுப்பிலே

''கைச்சதியினாமுறை விதித்தவா முற்கடித
சச்சபுட, சாசபுட, சட்பிதா புத்திரிக
கண்டச் சம்பதிப் பேத மாம்பல
கஞ்சப் பஞ்சகத் தாளமாம் படி''

என்ற அடிகளிலிருந்து காணக் கிடைக்கிறது. இவைகளின் விவரங்கள் சங்கீத நூல்களிலும் உள்ளன. அவைகளை கச்சற்புடம், சாசபுடம், சட்பிதா புத்திரிகம், சம்பத்து வேட்டம், உற்கடிதம் என்ற ஐந்து தாளங்களும். பெரும்பாலும் லகு, குரு, புலுதம் என்ற மூன்று அங்கங்களிலேயே அமைந்துள்ளன என்றும், தாளங்களின் ஆறு அங்கங்கள் லகு, த்ருதம், அனுத்ருதம், குரு, புலுதம், காகபாதம் என்றும் விளக்கியுள்ளார்கள்.

தற்காலத்தில் கையாளப்படும் தாளங்கள் பெரும்பாலும் லகு, த்ருதம், அனுத்ருதம் என்ற மூன்று அங்கங்களிலேயே அமையப்பட்டுள்ளன. மற்றைய மூன்று அங்கங்களும் நடைமுறையில் இல்லை.

தற்பொழுது நிலவிவரும் தாளங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தாளங்களின் பெயர் | அங்கங்கள் |
|---|---|
| துருவம் | 1011 |
| மட்யம் | 101 |
| ரூபகம் | 01 |
| த்ருபுடை | 100 |
| அட | 1100 |
| ஜம்பை | 1U0 |
| ஏகம் | 1 |

| ஜாதிகளின் பெயர் | அக்ஷரங்கள் |
|---|---|
| சதுஸ்ரம் | 4 |
| திஸ்ரம் | 3 |

| | |
|---|---|
| கண்டம் | 5 |
| மிஸ்ரம் | 7 |
| சங்கீர்ணம் | 9 |

1-லகு-இதன் அக்ஷரங்கள் ஜாதிக்கு ஏற்ப மாறும். கையினால் தட்டி எண்ணுதல்.

| | | | |
|---|---|---|---|
| சதுஸ்ர | லகு | I4 | 4அக்ஷரங்கள் |
| திஸ்ர | லகு | I3 | 3அக்ஷரங்கள் |
| கண்ட | லகு | I5 | 5அக்ஷரங்கள் |
| மிஸ்ர | லகு | I7 | 7அக்ஷரங்கள் |
| சங்கீர்ண | லகு | I9 | 9அக்ஷரங்கள் |

